ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2487/35 - 2026 මැයි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.05.07

2487/35 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4/3/17/2020/D/185.
பிரதேச செயலாளரின் குறிப்பு இலக்கம்: பிசெ/அக்/5/09/21.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 134 டீ, பம்பரகொட கிராம அலுவலர் பிரிவில் பனாகமுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் கா. அ. இலக்கம் 810252, வலய இலக்கம் 03, பத்திர இலக்கம் 1 மற்றும் 2025.10.17 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ள அளவில் 2.4011 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கும் 1 மற்றும் 3 காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர்: வலஹந்துவவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், 20-30 வருடங்கள் வயதுள்ள கலப்புப் பயிர்ச் செய்கை மற்றும் 10 நிரந்தரக் கட்டடங்கள் உள்ளன; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; ஆரம்ப உரிமை கோருபவர்: தலைவர், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.8911 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 03**
காணியின் பெயர்: வலஹந்துவவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், 20 - 30 வருடங்கள் வயதுள்ள கலப்புப் பயிர்ச் செய்கை மற்றும் 10 நிரந்தரக் கட்டடங்கள் உள்ளன; உரிமை கோருபவர்: காணி


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மறுசீரமைப்பு ஆணைக்குழு; ஆரம்ப உரிமை கோருபவர்: தலைவர், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம்: 1.5100 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்மீமன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஜீ. எஸ். சஜீவனீ,
பிரதேச செயலாளர்,
அக்மீமன.

பிரதேச செயலகம்,
அக்மீமன,
2026, ஏப்பிறல் 17.

EOG 05 - 0041